செயல்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

அதேபோன்று, போரூர் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்தில் நாளொன்றுக்கு 20 உள் நோயாளிகளும், 300 வெளி நோயாளிகளும் சிகிச்சை பெறுவதுடன், 60 பிரசவங்கள் அங்கு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதுபோக, அந்த மருத்துவமனைக்கு தற்போது தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின் அடிப்படையிலே 72 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு பிரசவ அறை, அறுவை அரங்கம் மற்றும் அறுவை சிகிச்சைக்குப் பின் கவனிப்பு போன்றவற்றுக்கு கட்டடங்களெல்லாம் கட்டப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியிலே மாண்புமிகு அம்மா அவர்களின் விரிவான காப்பீட்டுத் திட்டம் சிறப்பு வாய்ந்த தனியார் மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அயப்பாக்கம் என்கின்ற பகுதிக்கு புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் தேவையென்று தெரிவித்திருக்கிறார்கள். அது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாராவது ஒருவர் எழுந்திருங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்திலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவையெல்லாம் என் ஆய்விலே இருக்கின்றன. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இது குறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) திரு. பாலகிருஷ்ணன், இவையெல்லாம் என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. இது குறித்து என் அறையிலே வந்து பேசலாம். இதை சபையிலே நீங்கள் விவாதிக்கத் தேவையில்லை. (குறுக்கீடுகள்) விதி 55 இல் கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய ஆய்வில் உள்ளதை நான் முடிவெடுக்காமல் நீங்கள் அவையில் பேச முடியாது. (குறுக்கீடுகள்) எப்போது கொடுத்திருந்தாலும் என்னுடைய ஆய்வில் இருப்பதை நான் முடிவெடுக்காமல் நீங்கள் பேச முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய ஆய்விலே இருக்கிறது. இதுபோன்று திடீரென்று சபையில் வந்து கேட்டால் எப்படி? இதுபோன்று நிறைய பிரச்சினைகளுக்கு பதில் அளிக்கக் கோரி துறைகளுக்கு அனுப்பியிருக்கிறோம். பதில் வந்த உடனேயே ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை உட்காருங்கள். வரிசையாகத்தான் வரும். நான் வரிசையாக எடுத்துக்கொண்டிருக்கிறேன். விதி 55-ன்கீழ் நான் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஆகவே, நீங்கள் இப்படி கேட்கக்கூடாது. (குறுக்கீடு) இருக்கட்டும். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. எவ்வளவு நாட்களாக இருந்தாலும், என்னுடைய ஆய்வில் இருப்பதை நான் முடிவு எடுப்பதற்கு முன்பாக நீங்கள் அவையில் அனுமதி இல்லாமல் கேட்பது சரியல்ல. இதற்குமேல் நீங்கள் ஏதாவது பேசினால் அவைக் குறிப்பில் எதுவும் ஏறாது. தயவுசெய்து உட்காருங்கள். உங்களுடைய அறிவிப்பு திங்கட்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள்.

முற்பகல் 11-05

3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி மற்றும் கல்வி உதவித் திட்டச் சலுகைகள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் 3 அறிக்கைகளை அளிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். மேலும், அமர்ந்து கொண்டு அறிக்கைகள் அளிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.